தேதி:-27-06-2022 **Prob.O.P.No**.3/2018 எ.சா.1 (லலிதா)

**குறுக்குவிசாரணை**

நான் பங்கஜம் காலனியில் குடியிருந்து வருகிறேன். பங்கஜம் காலனியில் நான் குடியிருந்து வரும் வீடானது 6ம் எதிர்மனுதாரரான தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 6ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் தம்பி ஆவார். எ.சா.ஆ.2 ஆன ஆவணத்தின்படி 6ம் எதிர்மனுதாரருக்கு அவரது தகப்பனாரான ராசுநாடார் என்பவர் 14.02.1994ம் தேதியன்று உயில் அவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். எ.சா.ஆ.2 ஆன உயில் ஆவணத்தின்படி மனுதாரருக்கு ஒரு வீடும், 2ம் எதிர்மனுதாரருக்கு ஒரு வீடும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரர், 2ம் எதிர்மனுதாரர், 6ம் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு எனது தகப்பனார் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி வீடுகள் அனைத்தும் ஒரே காம்பவுண்டிற்குள் தான் உள்ளது என்றால் சரிதான். என் உடன்பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 4 பெண்மக்கள், 3 சகோதரர்கள் ஆவார்கள். என்னுடைய தங்கை தேனியில் உள்ளார், ஒருவர் வண்டியூரில் உள்ளார். ஒருவர் ஜெய்ஹிந்த்புரத்தில் உள்ளார். திருமணத்தின் போது எனது தகப்பனார் போதிய சீர்வரிசை, மற்றும் பண்டபாத்திரங்கள் கொடுத்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என்னுடைய கணவர் 1991ம் ஆண்டில் விபத்தில் இறந்துவிட்டார். சிம்மக்கல்லில் என் கணவருடன் கூட்டுக்குடும்பமாக இருந்து வந்தேன். என்னுடைய கணவர் இறந்த பின்னர், என்னுடைய தகப்பனார் என்னை அழைத்து வந்தார். நான் வந்த சமயத்தில் மனுதாரரும், 6ம் எதிர்மனுதாரரும் திருமணம்ஆகாமல் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தனர். அதன்பின்னர் தான் மனுதாரருக்கு திருமணமானது. எனக்கு ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்குழந்தைகள் உள்ளனர். என்னுடைய பெண்ணிற்கு திருமணமாகிவிட்டது. என்னுடைய மகனுக்கு திருமணமாகவில்லை. என்னுடைய மகளுக்கு ஏற்கனவே திருமணம் செய்து, விவாகரத்து ஆகி, மீண்டும் மறுதிருமணம் செய்து வைத்தேன் என்றால் சரிதான். 6ம் எதிர்மனுதாரருக்கு நல்லது, கெட்டது

அனைத்தையும் எல்லோரும் சேர்ந்து செய்வோமா என்றால் இல்லை. நான் மட்டும் தான் செய்து வருகிறேன். 6ம் எதிர்மனுதாரரை மற்ற எதிர்மனுதார்கள் மற்றும் மனுதாரர் ஆகியோர்கள் சேர்ந்து பராமரித்து வருகின்றனர் என்றும், தற்போது 6ம எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டுமென்பதற்காக நான் மட்டுமே 6ம் எதிர்மனுதாரரை பராமரித்து வருகிறேன் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. 6ம் எதிர்மனுதாரருக்கு தற்போது வயது 59 ஆகிவிட்டது. 6ம் எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்து வைக்க முயற்சி செய்தேன். என்னுடைய சகோதரர்கள் தடுத்துவிட்டார்கள். என்னுடைய மற்ற சகோதர, சகோதரிகள் 6ம் எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்ய முயற்சி செய்தும், நான் தான் சொத்து போய்விடக்கூடாது என்பதற்காக திருமணம் செய்வதற்கு தடை செய்தேன் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீடு 6ம் எதிர்மனுதாருக்கு உயிலின் மூலம் பாத்தியப்பட்டது என்பதால், அவருக்கு திருமணம் செய்து வைத்தால், அவரது மனைவி மற்றும் குழந்தைகள் என்னை வெளியேற்றிவிடுவார்கள் என்பதற்காக, 6ம் எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்யாமல் நான் தான் இடையூறாக இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தாய், தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் ஆண், பெண் மக்கள் அனைவரையும் ஒன்றாகத் தான் பாவித்து வந்தனர். ம.சா.ஆ.14 ஆன உயில் ஆவணத்தின் 3ம் பக்கத்தில் என்னுடைய இளையமகன் ரவீந்திரனுக்கு இன்னும் திருமணமாகவில்லை, அவனுக்கு திருமணம் நடந்தால் அன்னாரின் வாரிசுகளுக்கு சேர வேண்டியது. ஒருவேளை ரவீந்திரனுக்கு திருமணம் நடக்கவில்லை என்றால், அவன் இருக்கும் வரை அவன் அடியில் E ஷெடியூலில் கண்ட சொத்தை யாதொரு பந்தக பராதீனம் செய்யாமல் உன்னுடைய ஆயுசுக்கு பின் என்னுடைய மகள் லலிதாவின் வாரிசுகள் சர்வசுதந்திரமாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.14 உயில் ஆவணத்தை எழுதும் போது நான் செல்லவில்லை. ம.சா.ஆ.14 உயில் ஆவணம் என்னுடைய

ஆலோசனையின் பேரில் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.14 ஆன உயில்ஆவணத்தில் 6 ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்து அவருடைய இறப்பிற்கு பின்னிட்டு என்னுடைய மகளுக்கு கிடைக்க வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிர்உரையிலுள்ள விபரங்கள் எனக்கு ஓரளவிற்குத் தெரியும். எதிர்உரையில் கண்டுள்ள விபரங்களின்படி என்னுடைய நகைகள் மற்றும் வருமானத்தை கொண்டு கடைகள் கட்டியதாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய கணவர் நடத்தி வந்த வாசர் கம்பெனி கடனில் திவாலாகிவிட்டது என்றும், அதனால் தான் எனது கணவர் மனஉளைச்சலில் இறந்துவிட்டார் என்றும், அதன்பிறகு தான் நான் என்னுடைய தகப்பனார் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய எதிர்உரையில் மனுதாரரும், 2 ம் எதிர்மனுதாரரும் மனுச்சொத்தில் அனுபவபாத்தியதாரராக இருந்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய எதிர்உரையில் குறிப்பிட்டுள்ளது போல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய எதிர்உரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள உயில் சம்பந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது தாயார் 2018 ம் ஆண்டு எழுதிய உயில் குறித்து 6 ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்திற்கு வந்தால், உண்மை தெரிந்துவிடும் என்பதால் 6 ம் எதிர்னுதாரரை நீதிமன்றத்திற்கு வரவழைக்காமல் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 6 ம் எதிர்மனுதாரர் தமிழில் தான் கையெழுத்து செய்வார். பத்தாம்வகுப்பில் தேர்ச்சி பெறவில்லை. 6 ம் எதிர்மனுதாரருக்கு படித்துப் பார்த்து புரிந்து கொள்ள முடியும் என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலம் மற்றும் எதிர்உரை ஆகியவற்றை 6 ம் எதிர்மனுதாரர் ஏற்றுக் கொள்வதாக தான் மெமோ தாக்கல் செய்துள்ளார்

என்றும், 6ம் எதிர்மனுதாரர் தனியாக எதிர்உரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.